


**09.01. 2025**

**தலைப்புச் செய்திகள்**

- வளர்ச்சி அடைந்த தேசமாக இந்தியாவை மேம்படுத்துவதில் வெளிநாடுவாழ் இந்தியர்கள் முக்கிய பங்காற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- காச நோயை முற்றிலும் அகற்ற சிறப்பு மருத்துவ முகாம்களை சிறைச்சாலைகளில் நடத்த மத்திய உள்துறை அமைச்சகம் மாநிலங்களை அறிவுறுத்தியுள்ளது.
- தமிழ்நாட்டில் பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகம் இன்று தொடங்கியது.
- நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த காரைக்கால் மீனவர்கள் 10 பேரை இலங்கை கடற்படையினர் இன்று கைது செய்தனர்.
- ஆக்லாண்டில் ASB, கிளாசிக் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதிக்கு இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி - ஃபிரான்சின் ஆல்பனோ ஒலிவெட்டி இணை முன்னேறியுள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

**********

பிரதமர்

வளர்ச்சி அடைந்த தேசமாக இந்தியாவை மேம்படுத்துவதில் வெளிநாடுவாழ் இந்தியர்கள் முக்கிய பங்காற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ஒடிஷா தலைநகர் புபனேஸ்வரில் 18ஆவது வெளிநாடு வாழ் இந்தியர்கள் மாநாட்டை இன்று துவக்கிவைத்து பேசிய பிரதமர், சர்வதேச வளர்ச்சியிலும்,

இந்தியாவின் வளர்ச்சியிலும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் அளப்பரிய சேவையாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

நம் தேசத்தின் தூதுவர்களாக வெளிநாடுகளில் செயலாற்றிவருவதாக கூறிய பிரதமர் உலக அளவில் வெளிநாடு வாழ் இந்தியர்களின் திறன் போற்றப்படுவதாகவும், நம் நாட்டை அவர்கள் பெருமை அடைய செய்வதாகவும் குறிப்பிட்டார்.

நம்நாட்டின் கலாச்சார மதிப்பீடுகள் காரணமாகவே வெளிநாடுவாழ் இந்தியர்கள் உலக அளவில் மதிப்பை பெறுவதாக கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் தாம் சந்தித்த உலக தலைவர்கள் அனைவரும் வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களை பாராட்டுவதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீண்டிருப்பதாகவும், 3ஆவது பெரிய பொருளாதார நாடாக நம் தேசம் துரித வளர்ச்சி கண்டுவருவதாகவும் குறிப்பிட்டார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மின்சார வாகனங்கள், போர்விமானங்கள் உற்பத்தி, மெட்ரோ மற்றும் புல்லட் ரயில்கள், உள்ளிட்ட பிரிவுகளில் நம் நாடு தற்போது சிறந்து விளங்குவதாகவும், விரைவில் இந்தியாவில் தயாரிக்கும் விமானங்களில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் பயணிப்பார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

நம் நாட்டில் உள்ள இளையோரின் திறன்களை மேம்படுத்துவதற்கான அரசின் பல்வேறு நடவடிக்கைகளையும் பிரதமர் எடுத்துரைத்தார்.

**உலகளாவிய படைப்பாற்றல் திறன் தேவைகளை பூர்த்தி செய்யும் வலிமை இந்தியாவிற்கு உள்ளதாகவும் அவர் எடுத்துரைத்தார்.**

**21ஆவது நூற்றாண்டில் இந்தியா அதிவேக வளர்ச்சியுடன் துரிதமாக முன்னேறிவருவதாக குறிப்பிட்டார்.**

1915 ஆம் ஆண்டு வெளிநாட்டிலிருந்து மகாத்மா காந்தியடிகள் திரும்பிய வரலாற்று சிறப்பு மிக்க தினம் இது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

விரைவில் மகா கும்பம், பொங்கல், மகரசங்கராந்தி, லோஹ்ரி உள்ளிட்ட எழுச்சி மிகு விழாக்கள் இந்தியாவில் கொண்டாடப்பட இருப்பதை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்கள் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், திரு.தர்மேந்திர பிரதான், அஷ்விணி வைஷ்ணவ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நாளை நடைபெறும் நிறைவு விழாவில் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்கிறார்

**********

காசநோய்

சிறைகள் மற்றும் சீர்திருத்த பள்ளிகளில், காச நோயை முற்றிலும் அகற்றுவதற்கான 100 நாள் தீவிர இயக்கத்தை மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் தொடங்க மத்திய உள்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக மாநிலங்களுக்கு அமைச்சகம் எழுதிய கடிதத்தில், இந்நோயை முற்றிலும் அகற்றுவதற்கான மத்திய அரசின் தீவிர இயக்கத்தின் ஒருபகுதியாக இந்நடவடிக்கையை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளது.

இதற்கென சிறப்பு மருத்துவ முகாம்கள், தகவல் பலகைகள், தொலைதொடர்பு சாதனங்கள் மற்றும் கல்வியின் மூலம் அனைத்து சிறைகளிலும் பிரச்சாரம் மேற்கொள்ள அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

வரும் 27ஆம் தேதிமுதல் 2ஆம் தேதிவரை மத்திய சுகாதார குடும்ப நல அமைச்சகத்தின் சார்பில் காச நோய்க்கு எதிரான உறுதிமொழி ஏற்பு நிகழ்வை முன்னெடுத்து சென்று உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

**********

## UGC முதலமைச்சர்

பல்கலைகழகங்களுக்கு துணை வேந்தர்களை நியமிப்பது தொடர்பாக UGC வெளியிட்ட வரைவு நெறிமுறைகளை திரும்ப பெற வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கொண்டுவந்த அரசினர் தனித்தீர்மானம் இன்று ஒருமனதாக நிறைவேறியது.

முன்னதாக இந்த தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதலமைச்சர், கல்வி பொதுபட்டியலில் உள்ளதால் யுஜிசி தன்னிச்சையாக கொண்டுவந்த திருத்தம் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது என்றார்.

துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை ஆளுநரிடம் அளிப்பதற்கான திருத்தத்தை எதிர்த்து அரசியல் ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் மாநில அரசு போராடும் என்றார்.

இந்த தீர்மானத்திற்கு பிஜேபி தவிர அஇஅதிமுக, காங்கிரஸ், பா.ம.க, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், வி.சி.க தமிழக வாழ்வுரிமை, உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்தன.

இதனிடையே இந்த தீர்மானத்தின் மீது பேசிய பிஜேபி சட்டமன்ற குழு தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், UGC கொண்டுவந்துள்ள வரைவு அறிக்கையில் உள்ள குறைகளை மத்திய அரசிடம் சுட்டிக்காட்ட அவகாசம் உள்ளதாக குறிப்பிட்டார்.

முதலமைச்சர் கொண்டுவந்த தனி தீர்மானத்தை ஏற்க இயலாது என்று கூறி எதிர்ப்பு தெரிவித்து பிஜேபி உறுப்பினர்கள் பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

**********

**சட்டப்பேரவை கேள்விநேரம்**

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் தொகுதியில் உள்ள வலங்கைமான் புறவழிச்சாலை பணிகள் இந்தாண்டே தொடங்கப்படும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் இந்த திட்டத்தின் கீழ் 7 கிராமங்களில் 13.3 ஹெக்டேர் தனியார் நிலத்தை கையகப்படுத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நிலம் கையகம்படுத்தும் பணிகள் முடிவடைந்ததும் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

மயிலாடுதுறை புறவழிச்சாலை பணிகளுக்கு 7 கிராமங்களில் நில எடுப்பு பணிகள் முடிவடைந்துள்ளதாகவும், மீதமுள்ள 5 கிராமங்களில் இப்பணிகள் முடிவடைந்ததும் புறவழிசாலை பணிகள் தொடங்கப்படும் என்றும் கூறினார்.

**கேள்வி நேரத்தின் வெளியான மேலும் சில தகவல்கள்:**

**கள்ளக்குறிச்சி மாவட்டம் சோளம்பட்டு கிராமம்** அருகே மணிமுக்தா நதியின் குறுக்கே தடுப்பணை கட்டுவது தொடர்பான கோரிக்கையை சிறப்பு நிகழ்வாக கருதி அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

**காஞ்சிபுரத்தில் வந்தவாசி சாலையில் உள்ள** வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான நிலத்தில் போதிய நிலம் இருந்தால் இந்தாண்டே வணிக வளாகம் கட்டப்படும் என்று வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.முத்துசாமி தெரிவித்தார்.

சென்னை மாநகரில் அடுத்த மழைக்காலம் வரை குடிநீர் தட்டுப்பாடு வராது என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்தார்.

கும்பகோணம் மாநகராட்சிக்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கீ செய்யப்பட்டு மழை நீர் வடிகால் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**********

**பொங்கல்தொகுப்பு**

தமிழ்நாட்டில் பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகம் மற்றும் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை சைதாப்பேட்டையில் இன்று தொடங்கிவைத்தார்.

ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் முழுநீள கரும்பு அடங்கிய பரிசு தொகுப்பு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

வரும் 13ஆம் தேதிவரை இப்பணிகள் நடைபெறும்.

இதன்மூலம் 2 கோடியே 21 லட்சம் அரிசி குடும்ப அட்டை தாரர்கள் பயன்பெறுவார்கள்.

இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் பொங்கல் தொகுப்பு வழங்கப்படுகிறது.

**********

**பொங்கல் தொகுப்பு மாவட்டங்கள்**

மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகத்தை தொடங்கிவைத்தனர்.

இதனிடையே நெல்லை மாவட்டத்தில் இந்த திட்டத்தை தொடங்கிவைத்து பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கார்த்திகேயன் புகார்கள் இருப்பின் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**வாய்ஸ்**

**********

**முதலமைச்சர் - தொழில்நுட்பம்**

புத்தாக்கம் தொழில்நுட்ப வளர்ச்சியில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்வதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் தகவல் தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றிய அவர் தமிழில் மென்பொருளை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகவும்,

தமிழக அரசின் அனைத்து சேவைகளையும் ஆன்லைனில் வழங்க மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் வேலை வாய்ப்புகள் மேலும் பெருகும் என குறிப்பிட்டார்.

**வாய்ஸ்**

மகளிர் உரிமை தொகை திட்டத்தில் இதுவரை 13ஆயிரத்து 522 கோடி ரூபாய் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே பொங்கல் திருநாளை ஒட்டி ஒருகோடியே 14 லட்சத்து 61 ஆயிரம் மகளிருக்கும் மகளிர் உரிமை தொகையை இன்றே வழங்கிட முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

**********

**மீனவர்கள்**

நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த காரைக்கால் பகுதியை சேர்ந்த 10 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாக எமது நாகை செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**ராணிப்பேட்டை**

ராணிப்பேட்டை சிப்காட் அருகே நள்ளிரவு ஏற்பட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்த நிலையில் இப்பகுதியில் விபத்துகளை தவிர்க்க உரிய ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சித்தலைவர் டாக்டர் சந்திரகலா தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

**சிவகங்கை மாவட்டத்தில் நடப்பாண்டிற்கான** சிறந்த திருநங்கை விருதிற்கு தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

**********

**ஸ்ரீரங்கம்**

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோவில் வைகுண்ட ஏகாதசி பெருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான பரமபதவாசல் திறப்பு நாளை அதிகாலை நடைபெறுவதை ஒட்டி அனைத்து முன்னேற்பாடுகளையும் கோவில் நிர்வாகம் முழுவீச்சில் மேற்கொண்டுள்ளது.

இதையொட்டி திருச்சி மாவட்டத்திற்கு நாளை உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளது.

இவ்விழாவை முன்னிட்டு திருச்சி வழியாக இயக்கப்படும் சென்னை எழும்பூர் - கன்னியாகுமரி,

சென்னை - கொல்லம் விரைவு ரயில்கள் இரு மார்கங்களிலும் ஸ்ரீரங்கத்தில் இன்றும் நாளையும் 2 நிமிடம் நின்று செல்ல வகை செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே பௌர்ணமி கிரிவலத்தை ஒட்டி விழுப்புரம் - திருவண்ணாமலை இடையே வரும் 13ஆம் தேதி முன்பதிவில்லா சிறப்பு ரயில் இயக்கப்படும் என்றும் தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

**********

**டென்னிஸ்**

ஆக்லாண்டில் நடைபெறும் ASB கிளாசிக் ஆடவர் இரட்டையர் டென்னிஸ் அரையிறுதிக்கு இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி - ஃபிரான்சின் ஆல்பனோ ஒலிவெட்டி இணை முன்னேறியுள்ளது.

காலிறுதியில் இன்று இந்த இணை - இங்கிலாந்து இணையை 3-6 6-4 12-10 என்ற செட்களில் வென்று அரையிறுதிக்கு தகுதிபெற்றது.

**********

**டேபிள் டென்னிஸ்**

தோஹாவில் நடைபெறும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் **Manush Shah, Manav Thakkar** இணை --- ஹாங்காங் இணையை இன்று எதிர்கொள்கிறது.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

**********